# யோனா

*ஆசிரியர்*

யோனா தான் இதன் ஆசிரியர் என்று 1:1, ல் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நாசரேத் ஊருக்கு அருகில் உள்ள காத் ஏபர் என்ற ஊரை சேர்ந்தவன். இப்பொழுது கலிலேயா என்று அழைக்கப்படுகிறது. 2. ராஜா (7:11-20) இஸ்ரவேலின் வடக்கு ராஜ்ஜியத்திலிருந்து எழும்பின சில தீர்க்கதரிசிகளில் யோனாவும் ஒருவனாயிருந்தான். தேவனுக்கு கீழ்படியாதவர்களுக்கும் தேவன் கிருபையாய் பொறுமையாய் இருந்து இரண்டாம் வாய்ப்பையும் கொடுகிறார் என்று இந்த புத்தகம் சுட்டிக்காட்டுகிறது.

*எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

ஏறக்குறைய கிமு 793 க்கும் 450 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது.

இந்த சரித்திரம் இஸ்ரவேலில் தொடங்கி, மத்தியதரைக்கடலில் உள்ள யோப்பா துறைமுகத்திற்குப் போய், தைகிரிஸ் நதிப்பக்கம் உள்ள அசீரிய தேசத்தின் தலைநகரமான நினிவே பட்டணத்தில் முடிகிறது.

*யாருக்காக எழுதப்பட்டது*

இஸ்ரவேல் ஜனங்களுக்கும் வேதத்தை வாசிப்பவர்களுக்கும் எழுதப்பட்டது.

*எழுதப்பட்ட நோக்கம்*

கீழ்படியாமையும், எழுப்புதலும் இந்த புத்தகத்தின் கருத்துகளாகும். பெரிய மீனின் வயிற்றிலே மனம்மாறின யோனாவின் வித்தியாசமான அனுபவம் எழுதப்பட்டிருக்கிறது. அவனுடைய கீழ்படியாமை தன் எழுப்புதலுக்கும் மாத்திரமல்ல, நினிவே, தேசத்திற்கும்

முழுவதும் எழுப்புதல் வந்தது. தேவனுடைய செய்தி ஒரு குறிப்பிட்ட ஜனங்களுக்கு மாத்திரமல்ல, உலகமனைத்திற்கும் சொந்தமாகும். தேவன் உண்மையான மனம்திரும்புதலை விரும்புகிறார். மனிதர்கள் காணும்படி செய்கிற நல்லக் காரியங்களை அல்ல, நம்முடைய இருதய மாறுதலையே விரும்புகிறார்.

*மையக் கருத்து*

எல்லா ஜனங்களுக்கும் கிடைக்கும் தேவனின் கிருபை.

**பொருளடக்கம்**

1. யோனாவின் கீழ்ப்படியாமை — 1:1-14
2. யோனாவை பெரிய மீன் விழுங்கிவிட்டது — 1:15, 16
3. யோனாவின் மனம்திரும்புதல் — 1:17-2:10
4. யோனா நினிவேயில் பிரசங்கிப்பது — 3:1-10
5. தேவனுடைய இரக்கத்தின் மேல் யோனா கோபம் கொள்ளுகிறான் — 4:1-11

*யோனா யெகோவாவுடைய சந்நிதியிலிருந்து விலகி ஓடுதல்*

1 அமித்தாயின் மகனாகிய யோனாவுக்குக்
யெகோவாவுடைய வார்த்தை உண்டாகி, அவர்: 2 நீ
எழுந்து பெரிய நகரமாகிய நினிவேக்குப் போய்,
அதற்கு எதிராகப் பிரசங்கம் செய்; அவர்களுடைய
அக்கிரமம் என்னுடைய சந்நிதியில் வந்து எட்டினது
என்றார். 3 அப்பொழுது யோனா யெகோவாவுடைய
சந்நிதியிலிருந்து விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போவதற்கா
எழுந்து, யோப்பாவுக்குப் போய், தர்ஷீசுக்குப்போகிற
ஒரு கப்பலைக்கண்டு, கட்டணம் செலுத்தி, தான்
யெகோவாவுடைய சந்நிதியிலிருந்து விலகும்படி,
அவர்களோடு தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்.
4 யெகோவா கடலின்மேல் பெருங்காற்றை அனுப்பினார்;
அதினால் கடலிலே கப்பல் உடையுமளவிற்கு பெரிய

கொந்தளிப்பு உண்டானது. 5 அப்பொழுது கப்பற்காரர்கள்
பயந்து, அவனவன் தன்தன் தெய்வங்களை நோக்கி
வேண்டுதல்செய்து, பாரத்தைக் குறைப்பதற்காக கப்பலில்
இருந்த சரக்குகளைக் கடலில் எறிந்துவிட்டார்கள்;
யோனாவோ கப்பலின் கீழ்த்தளத்தில் இறங்கிப்போய்ப்
படுத்துக்கொண்டு, ஆழ்ந்து தூங்கினான்.
6 அப்பொழுது மாலுமி அவனிடம் வந்து: நீ
தூங்கிக் கொண்டிருக்கிறது என்ன? எழுந்திருந்து
உன்னுடைய தெய்வத்தை நோக்கி வேண்டிக்கொள்;
நாம் அழிந்துபோகாமலிருக்க உன்னுடைய தெய்வம்
ஒருவேளை நம்மை நினைத்தருளுவார் என்றான்.
7 அவர்கள் யாரால் இந்த ஆபத்து நமக்கு வந்ததென்று
நாம் தெரிந்துகொள்ள சீட்டுப்போடுவோம் வாருங்கள்
என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு
சீட்டுப்போட்டார்கள்; யோனாவின் பெயருக்குச் சீட்டு
விழுந்தது. 8 அப்பொழுது அவர்கள் அவனை
நோக்கி: யாரால் இந்த ஆபத்து நமக்கு வந்ததென்று
நீ எங்களுக்குச் சொல்லவேண்டும்; உன் தொழில்
என்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது?
நீ என்ன ஜாதியான் என்று கேட்டார்கள். 9 அதற்கு
அவன்: நான் எபிரெயன்; கடலையும் பூமியையும்
உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடம்
பயபக்தியுள்ளவன் என்றான். 10 அவன் யெகோவாவுடைய
சந்நிதியிலிருந்து விலகி ஓடிப்போகிறவன் என்று
தங்களுக்கு அறிவித்ததினால், அந்த மனிதர்கள்
மிகவும் பயந்து, அவனை நோக்கி: நீ ஏன் இதைச்
செய்தாய் என்றார்கள். 11 பின்னும் கடல் அதிகமாகக்
கொந்தளித்துக்கொண்டிருந்ததால், அவர்கள் அவனை
நோக்கி: கடல் நமக்காக அமைதியாகும்படி நாங்கள்
உனக்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.
12 அதற்கு அவன்: நீங்கள் என்னை எடுத்து கடலிலே

போட்டுவிடுங்கள்; அப்பொழுது கடல் அமைதியாக
இருக்கும்; என்னால்தான் இந்தப் பெரிய கொந்தளிப்பு
உங்கள்மேல் வந்ததென்பதை நான் அறிவேன் என்றான்.
13 அந்த மனிதர்கள் கரைசேருவதற்காக வேகமாகத்
தண்டுவலித்தார்கள்; ஆனாலும் கடல் மிகவும்
மும்முரமாகக் கொந்தளித்துக் கொண்டேயிருந்ததால்
அவர்களால் முடியாமற்போனது. 14 அப்பொழுது அவர்கள்
யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டு: ஆ யெகோவாவே,
இந்த மனிதனுடைய ஜீவனுக்காக எங்களை
அழித்துப்போடாதிரும்; குற்றமில்லாத இரத்தப்பழியை
எங்கள்மேல் சுமத்தாதிரும்; தேவரீர் யெகோவா; உமக்குச்
சித்தமாக இருக்கிறபடி செய்கிறீர் என்று சொல்லி,
15 யோனாவை எடுத்துக் கடலிலே போட்டுவிட்டார்கள்;
கடல் தன்னுடைய மும்முரத்தைவிட்டு அமைதியானது.
16 அப்பொழுது அந்த மனிதர்கள் யெகோவாவுக்கு
மிகவும் பயந்து, யெகோவாவுக்குப் பலியிட்டுப்
பொருத்தனைகளைச் செய்தார்கள். 17 யோனாவை
விழுங்குவதற்காக ஒரு பெரிய மீனை யெகோவா
ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீனின் வயிற்றிலே
யோனா இரவுபகல் மூன்றுநாட்கள் இருந்தான்.

# அத்தியாயம் 2

*யோனாவின் ஜெபம்*

1 அந்த மீனின் வயிற்றிலிருந்து, யோனா தன்னுடைய
தேவனாகிய யெகோவாவை நோக்கி விண்ணப்பம்செய்து:
2 என் நெருக்கத்தில் நான் யெகோவாவை நோக்கிக்
கூப்பிட்டேன்; அவர் எனக்கு பதில் கொடுத்தார்; நான்
பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என்
சத்தத்தைக் கேட்டீர். 3 கடலின் நடுமையமாகிய ஆழத்திலே
நீர் என்னைத் தள்ளிவிட்டீர்; நீரோட்டம் என்னைச்

சூழ்ந்துகொண்டது; உம்முடைய வெள்ளங்களும்
அலைகளும் எல்லாம் என்மேல் புரண்டது. 4 நான்
உமது கண்களுக்கு எதிரே இல்லாதபடிக்குத்
தள்ளப்பட்டேன்; ஆனாலும் இன்னமும் உம்முடைய
பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்றேன்.
5 தண்ணீர்கள் என்னுடைய ஜீவனை எடுக்க என்னை
நெருக்கினது; ஆழங்கள் என்னைச் சூழ்ந்தது;
கடற்பாசி என் தலையைச் சுற்றிக்கொண்டது.
6 மலைகளின் அடிவாரங்கள்வரைக்கும் இறங்கினேன்;
பூமியின் தாழ்ப்பாள்கள் என்றென்றைக்கும் என்னை
அடைக்கிறதாக இருந்தது; ஆனாலும் என் தேவனாகிய
யெகோவாவே, நீர் என் உயிரை அழிவிலிருந்து
காப்பாற்றினீர். 7 என்னுடைய ஆத்துமா எனக்குள்
சோர்ந்துபோகும்போது யெகோவாவை நினைத்தேன்;
அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த
ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது. 8 பொய்யான
விக்கிரக தெய்வங்களைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள்
தங்களுக்கு வரும் கிருபையைப் புறக்கணிக்கிறார்கள்.
9 நானோ, துதியின் சத்தத்தோடு உமக்குப் பலியிடுவேன்;
நான் செய்த பொருத்தனையைச் செலுத்துவேன்;
இரட்சிப்பு யெகோவாவுடையது என்றான். 10 யெகோவா
மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே
கக்கிப்போட்டது.

# அத்தியாயம் 3

*யோனா நினிவேக்குச் செல்லுதல்*

1 இரண்டாவதுமுறை யெகோவாவுடைய வார்த்தை
யோனாவுக்கு உண்டாகி, அவர்: 2 நீ எழுந்து பெரிய
நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக்
கற்பிக்கும் வார்த்தையை அதற்கு எதிராகப் பிரசங்கம்

செய் என்றார். 3 யோனா எழுந்து, யெகோவாவுடைய
வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான்; நினிவே
மூன்று நாட்கள் நடை பிரயாண தூரமும் விஸ்தாரமான
மகா பெரிய நகரமாக இருந்தது. 4 யோனா நகரத்தில்
நுழைந்து, ஒரு நாள் பிரயாணம்செய்து: இன்னும்
நாற்பதுநாட்களில் நினிவே கவிழ்க்கப்பட்டுப்போகும்
என்று கூறினான். 5 அப்பொழுது நினிவேயிலுள்ள
மக்கள் தேவனை விசுவாசித்து, உபவாசம் செய்யும்படிக்
கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும்
சாக்கு உடையை அணிந்துகொண்டார்கள். 6 இந்தச்
செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன்
தன்னுடைய சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான்
அணிந்திருந்த அங்கியைக் கழற்றிப்போட்டு, சாக்கு
உடையை அணிந்துகொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான்.
7 மேலும் ராஜா, தானும் தன்னுடைய ஆலோசகர்களும்
தீர்மானித்த கட்டளையாக, நினிவே எங்கும் மனிதர்களும்
மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும்
ருசிபார்க்காமலிருக்கவும், மேயாமலும் தண்ணீர்
குடிக்காமலும் இருக்கவும், 8 மனிதர்களும் மிருகங்களும்
சணலினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி
அதிக சத்தமாகக் கூப்பிடவும், அவரவர்கள் தம்தம்
பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள
கொடுமையையும்விட்டுத் திரும்பவும்வேண்டும்.
9 யாருக்குத் தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு
ஒருவேளை தேவன் மனமிரங்கி, தம்முடைய
கடுங்கோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார்
என்று சொல்லச்சொன்னான். 10 அவர்கள் தங்களுடைய
பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று
தேவன் அவர்களுடைய செயல்களைப்பார்த்து, தாம்
அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த
தீங்கைக்குறித்து மனமிரங்கி, அதைச் செய்யாமல்

இருந்தார்.

# அத்தியாயம் 4

*யெகோவாவின் இரக்கத்தைக் குறித்த யோனாவின் கோபம்*

1 யோனாவுக்கு இது மிகவும் வருத்தமாக இருந்தது;
அவன் கடுங்கோபம் கொண்டு, 2 யெகோவாவை
நோக்கி விண்ணப்பம்செய்து: ஆ யெகோவாவே,
நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச்
சொல்லவில்லையா? இதினாலேயே நான் முன்னமே
தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும் மன உருக்கமும்
நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்கிற்கு
மனமிரங்குகிறவருமான தேவனென்று அறிவேன்.
3 இப்போதும் யெகோவாவே, என் உயிரை என்னைவிட்டு
எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோடு இருக்கிறதைவிட
சாகிறது நலமாக இருக்கும் என்றான். 4 அதற்குக்
யெகோவா: நீ எரிச்சலாக இருக்கிறது நல்லதோ
என்றார். 5 பின்பு யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு,
நகரத்திற்குக் கிழக்கே போய், அங்கே தனக்கு ஒரு
குடிசையைப் போட்டு, நகரத்திற்கு நடக்கப்போகிறதைத்
தான் பார்க்கும்வரைக்கும் அதின் கீழே நிழலில்
உட்கார்ந்திருந்தான். 6 யோனாவுடைய தலையின்மேல்
நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய
மனவருத்தத்திற்கு நீங்கலாக்கவும் தேவனாகிய
யெகோவா ஒரு ஆமணக்குச்செடியை முளைக்கக்
கட்டளையிட்டு, அதை அவன்மேல் ஓங்கி வளரச்செய்தார்;
அந்த ஆமணக்குச் செடியினால் யோனா மிகவும்
சந்தோஷப்பட்டான். 7 மறுநாளிலோ கிழக்கு வெளுக்கும்
நேரத்தில் தேவன் ஒரு பூச்சிக்குக் கட்டளையிட்டார்; அது
ஆமணக்குச் செடியை அரித்துப்போட்டது; அதினால்

அது காய்ந்துபோனது. 8 சூரியன் உதித்தபோது தேவன்
வெப்பமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது
வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால்
அவன் சோர்ந்துபோய், தனக்குள்ளே சாவை விரும்பி:
நான் உயிரோடு இருக்கிறதைவிட சாகிறது நலமாக
இருக்கும் என்றான். 9 அப்பொழுது தேவன் யோனாவை
நோக்கி: நீ ஆமணக்குச் செடிக்காக எரிச்சலாக
இருக்கிறது நல்லதோ என்றார்; அதற்கு அவன்: நான்
சாகும்வரைக்கும் எரிச்சலாக இருக்கிறது நல்லதுதான்
என்றான். 10 அதற்குக் யெகோவா: நீ பிரயாசப்படாததும்
நீ வளர்க்காததும், ஒரு இரவிலே முளைத்ததும்,
ஒரு இரவிலே அழிந்துபோனதுமான ஆமணக்குச்
செடிக்காக மனதுருகுகிறாயே. 11 வலதுகைக்கும்
இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாத இலட்சத்து
இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனிதர்களும்
அநேக மிருகஜீவன்களும் இருக்கிற பெரிய நகரமாகிய
நினிவேக்காக நான் மனதுருகாமல் இருப்பேனோ என்றார்.

# இண்டியன் ரிவைஸ்டு வெர்ஸன் (IRV) - தமிழ்
# The Indian Revised Version Holy Bible in the Tamil language of India

copyright © 2017 Bridge Connectivity Solutions

Language: தமிழ் (Tamil)

Translation by: Bridge Connectivity Solutions

Contributor: Bridge Connectivity Solutions Pvt. Ltd.

Status of the project:
- Stage 1 - Initial Drafting by Mother Tongue Translators -- Completed
- Stage 2 - Community Checking by Church -- Completed
- Stage 3 - Local Consultant (Theologian/Linguist) Checking -- Completed
- Stage 4 - Church Network Leaders Checking -- Completed
- Stage 5 - Further Quality Checking -- In Progress

This translation is made available to you under the terms of the Creative Commons Attribution Share-Alike license 4.0.
You have permission to share and redistribute this Bible translation in any format and to make reasonable revisions and adaptations of this translation, provided that:
- You include the above copyright and source information.
- If you make any changes to the text, you must indicate that you did so in a way that makes it clear that the original licensor is not necessarily endorsing your changes.
- If you redistribute this text, you must distribute your contributions under the same license as the original.

Pictures included with Scriptures and other documents on this site are licensed just for use with those Scriptures and documents. For other uses, please contact the respective copyright owners.
Note that in addition to the rules above, revising and adapting God's Word involves a great responsibility to be true to God's Word. See Revelation 22:18-19.

2020-02-11

---

PDF generated using Haiola and XeLaTeX on 19 Oct 2021 from source files dated 17 Oct 2021
3a0fb119-8b83-5122-8f97-ecde66939145